<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், திருச்செங்கோடு</u>

<u>வாக்குமூல படிவம்</u>

**<u>OS.No. 46/2020</u>**

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | ரங்கநாதன் | வா.சா : | 1 |
| த/க/பெயர் : | ராமசாமி | தொழில் : | விவசாயம் மற்றும் ரிக் வண்டி தொழில் |
| ஊர் : | புள்ளிக்காரன்தோட்டம் | தாலுக்கா : | திருச்செங்கோடு |
| வயது : | 52 | நாள் : | 04.07.2025 |

<u>சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.</u>
<u>குறுக்கு விசாரணை</u>

1. நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் விவசாயம் செய்கிறேன். நான் ரிக் வண்டி வைத்திருந்தேனா என்றால் வைத்திருந்தேன். என்ன பெயரில் வைத்திருந்தேன் என்றால் ஸ்ரீஹரிணி போர்வெல் என்ற பெயரில் வைத்திருந்தேன். நான் வருமானவரி காட்டி வருகிறேனா என்றால் 2016 வரை காட்டி வந்தேன். அதன்பின்னிட்டு வருமான வரி காட்டவில்லை என்றால் சரிதான். வருமானம் சம்பாதிக்கும்போது கட்டாயமாக வருமான வரி தாக்கல் செய்ய வேண்டும் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வருமானம் வரவில்லை என்பதால் தான் 2016 பின்னிட்டு வருமானவரி தாக்கல் செய்யவில்லையா என்றால், எனது தொழில் நலிவடைந்தது. 2016ம் ஆண்டு முதல் எனக்கு பெரிய அளவில் வருமானம் இல்லை என்றால் எனது விவசாய நிலங்கள் 20 ஏக்கர் உள்ளது, அதில் 400 தென்னை மரங்கள் உள்ளது.

2. எனக்கு வருமானமே இல்லை என்பதால் நான் வருமான வரி தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் காலம்சென்ற முத்துசாமிக்கு எப்போது கடன் கொடுத்ததாக சொல்லியுள்ளேன் என்றால் 18.02.2017ம் தேதி. முத்துசாமி எப்போது இறந்தார் என்றால் நான் கடன் கொடுத்த தேதியிலிருந்து இரண்டு நாட்கள் கழிதது 20.02.2017 அன்று இறந்தார். அவர் எப்படி இறந்தார் என்றால், தற்கொலை செய்துகொண்டார். என்ன காரணம் என்றால், குடும்ப பிரச்சினையால் செய்துகொண்டார். ஒருவர் தற்கொலை செய்துகொண்டார் போலீசார் வழக்கு தாக்கல் செய்து விசாரணை செய்வார்கள் என்றால் சரிதான்.

3. முத்துசாமி இறந்ததற்கு போலீசார் வழக்கு ஏதாவது தாக்கல் செய்தார்களா என்றால் எனக்கு தெரியாது. முத்துசாமிக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட விவசாய நிலங்கள் உள்ளது எனக்கு தெரியும். முத்துசாமிக்கு சொந்தமாக வீடு உள்ளதா அல்லது இல்லையா என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. 2017ம் ஆண்டிற்கு பல வருடங்கள் முன்பாகவே அவரின் இரண்டு மகள்களுக்கும் திருமணம் செய்துவிட்டார் என்றால் சரிதான். அவர்கள் தான் 2, 3 பிரதிவாதிகள். 2, 3 பிரதிவாதிகள் திருமணத்திற்கு பிறகு அவர்கள் நல்லமுறையில் கணவர் வீட்டில் இருந்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

4. முத்துசாமி தொழில் ரீதியாகவும், தனக்குள்ள விவசாய நிலங்கள் மூலமாகவும் நல்ல வருமானம் பெற்று சௌகரிகமாக இருந்து வந்தார் என்றால் சரிதான். 7 லட்சம் பெரிய தொகை என்றால் சரிதான். மேற்படி தொகையை நான் பணமாக கொடுத்தேன். ரூ.7லட்சம் பணம் கையிருப்பில் இருந்ததற்கு ஆதாரமாக ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. நான் இவ்வழக்கை பணம் கொடுத்ததாக சொல்லும் தேதியிலிருந்து மூன்று வருடங்கள் முடியும் இறுதி காலத்தில் தான் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். 3 வருட இடைப்பட்ட காலத்தில் நான் பிரதிவாதிகளுக்கு முத்துசாமி வாங்கிய கடனை திருப்பி தர சொல்லி எவ்வித நோட்டீஸ்சும் அனுப்பவில்லை என்றால் சரிதான்.

5. நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையிலும், பிரமாண வாக்குமூலத்திலும் எதற்காக முத்துசாமி கடன் வாங்கினார் என்ற விவரத்தை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் முத்துசாமி தற்கொலை செய்து கொண்டு இறக்கவில்லை என்றாலும், அவருக்கு உடல்நிலை சரியில்லாமல் போய்தான் இறந்தார் என்றாலும் அது தவறு. முத்துசாமி பணம் வேண்டும் என்று எவ்வளவு நாட்கள் முன்பாக கேட்டார் என்றால், ஒரு மாதத்திற்கு முன்பாக கேட்டார். முத்துசாமி நல்ல நிதிநிலையில் இருக்கிறாரா, பணம் திரும்பி செலுத்துவரா, வேறு ஏதாவது கடன் வாங்கியிருந்தாரா என்ற விவரங்களை தெரிந்து தான் கடன் கொடுத்தேனா என்றால் இல்லை.

**(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.)**

Sd/- D. Mohankumar,
Additional Subordinate Judge,
Tiruchengode.